பட்டா வழங்கல்.

*3717 திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் உள்ள சங்கராபாளையம் ஊராட்சியைச் சேர்ந்த குருநாதபுரத்தில் குடிசை போட்டிருப்பவர்களுக்கு பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

9.15 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ). பெரியார் மாவட்டம், பவானி வட்டம், சங்கராபாளையம் கிராமத்தில் ஒப்படை கோரப்படும் புல எண். 105 என்பது மந்தைப் புறம்போக்காகும். மந்தை மற்றும் மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தில் ஒப்படை வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்புலனை ஒட்டியுள்ள குருநாதசுவாமி கோவில் திருவிழா காலத்தில் மாட்டுச் சந்தைகள் கூடுவதால் மாடுகள் நிற்பதற்கு வேறு இடமில்லை. மேற்கண்ட நிலம் பொது நலனுக்குத் தேவைப்படுவதால் நில ஒப்படை செய்ய ஆட்சேபணையும் உள்ளது. இதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இச்சூழ்நிலையில் மேற்கண்ட புல எண். 105இல் ஆக்கிரமணம் செய்து குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. தி. ரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் காட்டிலாகாவுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டு காலமாக குடியமர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களுக்கு, அந்த இடம் மத்திய சர்க்காருக்குச் சொந்தமாக இருப்பதால், அதை மாநில அரசு பெற்று, நீண்ட நாள் கோரிக்கையான பட்டா வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 1906 மற்றும் 5921 ஆகியவை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கத் தள்ளிவைக்கப் படுகின்றன.